# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS .No.**165/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு.ரவிசந்திரன் | ஊர் | : | |
| த.பெ. | : | திரு. திருமேனி | மாவட்டம் | : | |
| வயது | : | | தொழில் | : | |

2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27-ஆம்நாள் **வா.சா.1 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

முதல் விசாரணை

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 12.5.1977 தேதியிட்ட வாதியின் தாயார் தனபாக்கியத்தம்மாள் பெயரில் ஏற்பட்ட கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.1** ஆகும். 19.11.2010 தேதியிட்ட வாதியின் தகப்பனார் திருமேனி வாதியின் பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.2** ஆகும். 1.12.2010 தேதியிட்ட வாதியின் தகப்பனார் திருமேனி வாதியின் பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.3** ஆகும். 19.11.2010 தேதியிட்ட வாதியின் தகப்பனார் திருமேனி 1ஆம் பிரதிவாதியின் பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.4** ஆகும். 9.5.2007 தேதியிட்ட வாதியின் தகப்பனார் திருமேனி 2ஆம் பிரதிவாதியின் பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.5** ஆகும். 9.5.2007 தேதியிட்ட வாதியின் தகப்பனார் திருமேனி 2ஆம் பிரதிவாதியின் பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.6** ஆகும்.

14.4.1997 தனபாக்கியத்தம்மாள் அவர்களின் இறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.7** ஆகும். 3.9.1997 தேதியிட்ட வாரிசு சான்றிதழ் நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.8** ஆகும். 26.5.2023 தேதியிட்ட திருமேனி அவர்களின் இறப்பு சான்றிதழ் அசல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.9** ஆகும். 6.6.2024 தேதியிட்ட 5ஆம் பிரதிவாதி 6ஆம் பிரதிவாதி பெயரில் எழுதி வைக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.10** ஆகும்.10.6.2024 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.11** ஆகும். 8.2.2019 தேதியிட்ட திருமேனி அவர்கள் மகேஸ்வரன் பெயரில் எழுதி வைத்த உயில் பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.12** ஆகும். வா.சா.ஆ. 7, 8 ஆவணங்களுக்கு பிரதிவாதி தரப்பில் ஆட்சேபிக்கப்படுகிறது.

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை வழக்கறிஞர் வேண்டுகோள்படி ஒத்திவைக்கப்படுகிறது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்/- ப ,நாகராஜன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**